O.S. No. 30/2016 நாள்.26.09.2022

DW1 – ராஜசுலோச்சனா

**குறுக்கு விசாரணை**

1. பி.வா.சா.ஆ.9 வது ஆவணம் யாரால் யாருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் எனது தகப்பனார் கோபாலும் எனது தாத்தா சின்னவனும் 22.03.1970 அன்று கிணறு வெட்டுவதற்காக அரசாங்கத்திடம் அடமானத்திற்காக எழுதிக்கொடுத்தனர். மேலே கூறிய அடமானத்தினுடைய நிலைமை என்னவென்று தெரியுமா என்றால் அடமானத்தை எனது தகப்பனார் கோபால் மீட்டுவிட்டார். எந்த தேதியில் கோபால் அடமானத்தை மீட்டார் என்பது பற்றி எனக்கு தெரியாது.

2. எழுதிக் கொடுக்கப்பட்டவரிடம் இருந்து எந்த தேதியில் அடமானம் மீட்கபட்டது என்ற விவரம் கேட்டு தெரிந்து கொண்டீர்களா என்றால் நான் சிறு பிள்ளை என்பதால் அந்த விவரங்களை நான் கேட்டு தெரிந்து கொள்ள இயலவில்லை. மேலே கூறிய அடமான பத்திரம் இயற்றப்பட்டது பற்றி எப்போது தெரியும் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னரே தெரியும். இந்த வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்த நாள் எனக்கு ஞாபகம் இல்லை.

3. எங்களது எதிர்வழக்குரையில் அடமானம் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றால் தெரிவிக்கப்படவில்லை. எனது எதிர்வழக்குரையில் இந்த ஆவணத்தை பற்றி கூறவில்லை என்பதால் இந்த வழக்கில் இந்த ஆவணத்தை தாக்கல் செய்ய எனக்கு உரிமை இல்லை என்றால் உரிமையுண்டு. பொதுவாக ஒத்தி, அடமானம், கிரையம் போன்ற ஆவணங்களை எழுதிக் கொடுக்கும்போது எழுதிக்கொடுப்பவரிடம் பட்டா இருக்க வேண்டும் என்றால் சரிதான். பட்டா இருந்ததால் தான் மேலே கூறிய அடமான பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

4. 26.03.1962ம் தேதி சீதையம்மாளுக்கு சின்னவன் தாவா சொத்தை பொறுத்து இனாம் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்து விட்டதால் அதன் பின்னிட்டு சின்னவனுக்கோ, எனது தகப்பனார் கோபாலுக்கோ தாவா சொத்தை அடமானம் வைப்பதற்கு உரிமை இல்லை என்று சொன்னால் தவறு இனாம் செட்டில்மெண்ட் எழுதப்படவில்லை. என்னை மீண்டும் அழைத்து விசாரிக்க நான் தாக்கல் செய்த மனுவில் என்ன என்ன பரிகாரங்களை கேட்டு இருந்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை.

5. நான் தாக்கல் செய்த மீண்டும் அழைத்து விசாரிக்க கூடிய மனுவில் பி.வா.சா.ஆ.9 மட்டும் குறியீடு செய்தால் மட்டும்போதும் என பரிகாரம் கேட்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். மேலே கூறிய அடமான பத்திரத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் நாகூரான் மகன் தொண்டியப்பன் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். எம். செல்லம் என்ற நபரை தெரியுமா என்றால் எனக்கு தெரியும். அவர் தற்போது உயிருடன் இல்லை.

6. வெங்கட்ராமன் என்ற நபரை தெரியுமா என்றால் அவர்களை பற்றி எனக்கு தெரியாது. வெங்கட்ராமன் உயிருடன் இருக்கிறா என்றால் அவரை பற்றி எனக்கு தெரியாது என்பதால் அவர் உயிருடன் இருக்கும் விவரமும் எனக்கு தெரியாது. எத்தனை இலக்க சொத்துக்கள் அடமானம் வைக்கப்பட்டிருந்தது என்றால் 33/1 என்ற சர்வே எண் கொண்ட சொத்து மட்டும் அடமானம் வைக்கப்பட்டது. லேலே கூறிய அடமான பத்திரம் முறையானது இல்லை என்றால் முறையான ஆவணம் தான்.

7. இந்த அடமானப்பத்திரத்தை இயற்றிவர்கள் உரிமை இல்லாமல் இயற்றினார்கள் என்றால் அவர்களுக்கு உரிமை உண்டு.